தினகரன் 3
கோவை 11 டிசம்பர் 2007

### ஈஷா அறக்கட்டளை சார்பில்

# 11.4 கோடி மரக்கன்றுகள் நடும் திட்டம் துவக்கம்

கோவை, டிச.11: ஈஷா அறக்கட்டளை சார்பில் 11.4 கோடி மரக்கன்றுகள் நடும் திட்டம் கோவையில் துவங்கியது.

கோவையில் உள்ள ஈஷா அறக்கட்டளை பசுமைக்கரங்கள் திட்டத்தைச் செயல்படுத்துகிறது. இதன்மூலம் சுற்றுச்சூழல் அழிவைச் சரி செய்ய, மாசுபாட்டை களைய, தமிழகத்தில் மரங்களின் அடர்த்தியை 10 சதவீதம் அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழகம் முழுவதும் 11.4 கோடி மரக்கன்றுகள் நட முடிவெடுக்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் 2.5 கோடி மரக்கன்றுகளை நட்டு வளர்க்க திட்டமிட்டது. வணிக நிறுவனம், தொண்டு நிறுவனம், கல்வி அமைப்பு சார்பில் இந்த மரக்கன்றுகள் நடப்படும்.

கோவை இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் பெட்ரோல் விற்பனை நிலையத்தில் நேற்று மரக்கன்றுகள் வழங்கும் பணி துவங்கியது.

இவ்விழாவுக்கு மாவட்ட வன அலுவலர் அன்வர்தீன் தலைமை வகித்தார்.

முதல் மரக்கன்றினை இந்துஸ்தான் பெட்ரோலியம் நிறுவன கோவை மண்டல தலைமை பொது மேலாளர் செல்வக்குமார் வழங்கினார். சுகுணா பவுல்ட்ரி நிறுவன பொது மேலாளர் ரவீந்தர் பெற்று கொண்டார்.

சுந்தராபுரம் சுப்பையன் அண்ட் கோ பெட்ரோல் விற்பனை நிலையத்தில் நடந்த விழாவில் இண்டோஷெல் காஸ்ட் இந்தியா தலைவர் ஜெகதீசன் கலந்து கொண்டார்.

ஆத்துப்பாலம், டாக்டர் நஞ்சப்பா ரோடு பகுதி பெட்ரோல் விற்பனை நிலையங்களில் மரக்கன்று வழங்கப்பட்டது.

பெட்ரோல் பங்கில் பொதுமக்களுக்கு இலவசமாக மரக்கன்று வழங்கப்படும்.

விவரம் பெற ஈஷா அறக்கட்டளையை 94433 62863, 98430 59597 என்ற செல்போனில் தொடர்பு கொள்ளலாம்.